# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒரு காட்டில் பென்னம்பெரிய மரங்கள் காணப்பட்டன. அம்மரங்களில் பறவைகள் கூடுகட்டி வாழ்ந்து வந்தன. அப்பறவைகள் தங்கள் குஞ்சுகளுக்கு இரை தேடிக்கொண்டு வந்து கொடுத்து மகிழ்ந்தன. பறவைகள் எங்கு பறந்து சென்றாலும் கூட்டம்கூட்டமாகவே பறந்து செல்லும். எந்நேரமும் ஒரே மகிழ்ச்சியாக ஆரவாரிக்கும்.அவற்றின் இனிய ஒலி அக்காட்டில் இனிய இசையாக ஒலிக்கும். அதே காட்டில் வாழ்ந்த மான் ஒன்று இவற்றின் மகிழ்வுக்கு என்ன கரணியம் என அறிந்துகொள்ள விரும்பியது. அது பறவைகளிடம் சென்று நீங்கள் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள் உங்களுக்கு எதிரிகளே இல்லையா? நாங்கள் காட்டில் அஞ்சி அஞ்சி வாழ்கின்றோம் நீர் குடிக்கக்கூட ஆற்றங்கரைக்குச் செல்ல முடியாதுள்ளது. புலி, சிங்கம் போன்ற விலங்குகள் எங்களைக் கொன்று தின்று விடுகின்றன எனக் கவலையுடன் கூறியது. அதைக் கேட்ட பறவைகள் நாங்கள் எங்கு சென்றாலும் ஒன்றாகவே செல்வோம். வலையில் மாட்டினால் கூட எல்லோரும் சேர்ந்து வலையைத் தூக்கிக் கொண்டு பறந்துவிடுவோம். எமது ஒற்றுமைதான் எமது மகிழ்வுக்குக்கரணியம். நீங்கள் எங்கு சென்றாலும் சேர்ந்தே செல்லுங்கள். உங்களுக்குத்தான் கூரிய கொம்புகள் இருக்கின்றனவே. உங்களைத் தாக்க வரும் எதிரியைச் சேர்ந்தே தாக்குங்கள். எதிரி அஞ்சி ஓடிவிடும் என்று கூறின. அதைக் கேட்ட மான் பறவைகள் கூறியதை மற்றைய மான்களுக்குக் கூறியது. மறுநாள் நீர் அருந்துவதற்கு மான்கள் கூட்டமாகச் சென்றன. சிங்கம் ஒன்று மானைப் பிடிக்க வந்தது. மான்கள் ஒன்றுசேர்ந்து கொம்பினால் சிங்கத்தைக் குத்தின. சிங்கம் தப்பினேன் பிழைத்தேன் என ஓடிவிட்டது. மான்கள் மகிழ்ச்சியாக நீர் அருந்தின. நாம் ஒன்று சேர்ந்து எதிர்த்து நின்றால் எமக்கும் வெற்றி உறுதி.